# குழந்தைக்கூத்தன்

## மெஞ்ஞானக் கல்வி மலர் -1



நமச்சிவாய



# குழந்தைக்கூத்தன்

## மெஞ்ஞானக் கல்வி மலர் – 1

# உள்ளே....


1. மணப் பேச்சு முடிந்தது -3
2. உபதேசம் - 1 -13
3. மாணிக்கவாசகரோடு நமச்சிவாய கிரிவலம் -14
4. காட்டுப் பன்றி வேட்டை -30
5. மெய்யுணர்தல் -37
6. மெஞ்ஞானக் கல்வி -46


நமச்சிவாய

---


நூல்

**குழந்தைக்கூத்தன் மெஞ்ஞானக் கல்வி மலர் - 1**

ஆசிரியர்

**சிவபுரம் ஐயா தம்பிரான்தோழர் கபிலனார்**

உதவி ஆசிரியர் : **சிவபுத்தென்றல் அஜந்தா**

துணை ஆசிரியர் : **தூண்டியசோதி சரவணசுந்தர்**

இணை ஆசிரியர் : **இளையதம்பிரான் எந்தையடியார்**

உரிமை : **சிவபுரம்**

பதிப்பு : **முதலாம் பதிப்பு 2026**

விலை : **தொண்டுதவி ரூ.100/-**

அச்சு : **சிவபுரம்**

அட்டைப்படம் : **சி.சுந்தரபாண்டியன்**

விலை : **நன்கொடை விரும்புவதைக் கொடுக்கவும்**

வெளியீடு : **சிவபுரம்**

**எண்:13, சன்னதி தெரு, கனகதாரா நகர் பிரதான சாலை,**
**வளசரவாக்கம், சென்னை-600087.**

இணையதளம் : **www.sivapuram.com**

மின்னஞ்சல் : **sivapura@gmail.com**

திருமுகம் (Facebook) : **tirumaraik.koyil, sivapuramadiyaar**

தொலைபேசி எண் : **97910 34098, 99405 87597,**
**9841087052, 9500111546**

# திருநாவுக்கரசர் வரலாற்றுக் கதை நூலிலிருந்து

- சிவபுரம் ஐயா
தம்பிரான்தோழர் கபிலனார்

இயல் - 1

## மணப் பேச்சு முடிந்தது



"இந்த வருடம் நல்ல விளைச்சல், நல்ல இடமாகப் பார்த்துத் திலகவதிக்குத் திருமணத்தை முடித்து விட வேண்டியதுதான்" என்று கூறியபடி மதிய வெய்யிலின் சூட்டைத் தவிர்ப்பதற்காகத் தலையிலே கட்டியிருந்த துண்டை உதறித் தோளிலே போட்டுக்கொண்டு வீட்டினுள்ளே நுழைந்தார் புகழனார்.

அதுவரை கூடத்தில் அமர்ந்து கூடை முடைந்து கொண்டிருந்த திலகவதி எழுந்து வீட்டின் பின்புறமாக ஓடிச் சென்றாள்.

"மகள் ஏன் இப்படித் திடீரென்று ஓடிச் செல்கிறாள்" என்று கேட்டார் புகழனார்.

"வயசுப் பொண்ணு அவ முன்னமே அவளுடைய திருமணத்தைப் பற்றிப் பேசினால் வெட்கப்பட மாட்டாளா" என்றார் புகழனாரின் மனைவி மாதினி.

"ஓகோ அப்படியா" என்றார் புகழனார்.

``சரி, சரி இதோ நான் மோர் எடுத்து வருகிறேன். களைப்பாக இருக்கிறீர்கள்'' என்று கூறியவாறு அடுப்படிப் பக்கம் சென்றாள் மாதினி.

``அம்மே, இங்கே பாரேன்'' என்ற திலகவதியின் சத்தம் கேட்டது.

``மாதினி கொஞ்சம் எட்டிப் பார், மருணீக்கிதான் அவளோடு வம்பு பண்ணறான் போல் இருக்கிறது'' என்று பதிலுக்குக் குரல் கொடுத்தார் புகழனார்.

``இவங்க பஞ்சாயத்துக்கே நேரம் சரியாகிவிடும் போல் இருக்கிறதே'' என்ற மாதினி ``மருணீக்கி அவளைத் தொந்தரவு பண்ணாதே'' என்று சொன்னவாறே செம்பிலே மோர் எடுத்து வந்தாள்.

``மருணீக்கி எங்கே போய்விட்டு வருகிறான்'' என்று கேட்டார் புகழனார்.

``ஊரில் உள்ள சிறுவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு தோப்பு துரவு என்று சுற்றுவது குளத்திலே குளிப்பது இதை விட்டால் என்ன செய்யப் போகிறான் உங்களது மகன்'' என்றாள் மாதினி.

``இல்லை அப்பூஉ நாங்கள் எல்லோரும் சேர்ந்து தென்னந்தோப்பிலே குரும்பட்டியில் தேர் செய்து அதிலே சுவாமியை எழுந்தருளுவித்து ஊர்வலமாக அழைத்துச் சென்றோம்'' என்றான் மருணீக்கி.

``குரும்பட்டியில் தேரா எப்படிச் செய்தீர்கள்'' என்றார் புகழனார்.

"குரும்பட்டியில் மெல்லிய குச்சிகளையும் ஈர்க்கிலையும் குத்தித் தொடுத்து தேர் போல் செய்தோம். கீற்றைப் பின்னி இருப்பாக வைத்தோம். அதிலே குருத்தோலையில் செய்த இறைவன் திருமேனியை எழுந்தருள வைத்தோம்" என்றான் மருணீக்கி.

"அருமையான விளையாட்டு பார்த்தாயா மாதினி. என் மகன் எம்பெருமான் மீது கொண்டிருக்கும் பற்றையும் பக்தியையும் பார்த்தாயா" என்றார் புகழனார்.

அது கேட்ட மருணீக்கி "ஆம் அப்படி இன்று நாம் தேர் கட்டி விளையாடும்போது அவ்வழியே வந்த சாது ஒருவர் விளையும் பயிர் முளையிலே தெரியும். நீ பெரிய ஆளாக வருவாய் என்று சொல்லி என்னுடைய பெயரையும் கேட்டுச் சென்றார்" என்றான்.

"பார்த்தாயா, பார்த்தாயா நான் சொன்னபோது கிண்டலாகச் சிரித்தாய். இப்போதாவது நம்புகிறாயா. மருணீக்கி வேளாளர் குலத்தினரின் இருளை நீக்குவான்" என்றார் புகழனார்.

"மகனின் புகழ் பாடியது போதும். வாருங்கள் கொஞ்சம் பிட்டு சாப்பிடலாம்" என்று அழைத்தாள் மாதினி.

"பிட்டா" என்று தன்னுடைய ஆவலை வெளிப்படுத்தினான் மருணீக்கி.

"அதுதானே ஏது இந்தப் பிட்டு" என்று கேட்டார் புகழனார்.

"பிட்டு விற்கும் தங்கம் பிட்டு வணிகர் தெருவிற்குச் செல்லும்போது இந்தப் பக்கமாகக் கூவிச் சென்றாள்.

திலகவதி ஆசைப்பட்டாள். அவளுக்குப் பிட்டு வாங்கும்போது உங்களுக்கும் சேர்த்து வாங்கியிருக்கிறேன்" என்றாள் மாதினி.

"பிட்டுக்குத் தொட்டுக்க என்ன இருக்கிறது அம்மே" என்றான் மருணீக்கி.

"தங்கமக்கா கொடுத்த காரத் துவையலும் அம்மே செய்த சர்க்கரைப் பாகும் இருக்கிறது" என்று கூறியபடி புகழனாருக்கும் மருணீக்கிக்கும் இலை போட்டாள் திலகவதி.

"சர்க்கரைப் பாகுதான் பிட்டுக்கு சரியான தொக்கு" என்றான் மருணீக்கி.

"உன்னைப் பற்றித் தெரிந்துதான் அம்மே செய்திருக்கிறார்" என்றாள் திலகவதி.

"திலகவதி நீயும் அருகில் அமர்ந்து சாப்பிடலாமே" என்றார் புகழனார்.

"நான் ஏற்கனவே சாப்பிட்டு விட்டேன்" என்று மறுத்தாள் திலகவதி.

மாதினி பிட்டை பரிமாறினாள். மருணீக்கியும் புகழனாரும் விரும்பிச் சாப்பிட்டனர்.

வீட்டின் கோடிப் புறத்தில் கை அலம்புவதற்குத் தண்ணீர் எடுத்து வைக்கச் சென்றாள் திலகவதி. கிணற்றிலிருந்து தண்ணீரை எடுத்து வரும்போது என்றும் காணாத அன்னியர் ஒருவர் கிணற்றுப் பக்கமாக நின்று கொண்டிருந்தான். திலகவதியைப் பார்த்ததும் இமைக்காமல்

பார்த்தான் அந்த வாலிபன். திலகவதி நாணிச் சிவந்த முகத்தால் தரையை நோக்கியவாறு துலாக் கயிற்றை வலித்துத் தண்ணீரை மொண்டு சுரைக்காய்க் குடுவையிலே ஊற்றி இடுப்பிலே வைத்தவாறு வீட்டை நோக்கி நடந்தாள்.

அன்னிய இளைஞனின் நடமாட்டத்தை வெளியே வந்த புகழனார் கண்டார். "யாரது" என்று அதட்டல் குரலில் கேட்டார்.

"நான் பல்லவ மன்னனின் படை வீரன். ஒற்றன் ஒருவனைத் துரத்தி வந்தபோது அவன் இந்தப் பக்கமாக வந்தான். அவனைத் தேடி வந்தேன்" என்றான் அந்த இளைஞன்.

"சரி சரி ஆகட்டும்" என்றார் புகழனார்.

புகழனார் கை அலம்ப குடுவையில் இருந்த தண்ணீரை ஊற்றியவாறே திலகவதி அந்த இளைஞனைப் பார்த்தாள். அவனும் திரும்பி அவளைப் பார்த்தான்.

"என்னம்மே பண்ணுகிறாய் தண்ணீரை ஊற்று" என்ற புகழனாரின் குரல் கேட்டு சுயநினைவிற்கு வந்த திலகவதி தண்ணீரை ஊற்றினாள். நெஞ்சுக்குள்ளே அனல் ஒன்று வந்து தகிப்பதை உணர்ந்த திலகவதி அதைத் தணிப்பதற்குத் தானும் ஒரு செம்பில் தண்ணீரை மொண்டு குடித்தாள்.

திலகவதி வீட்டு முற்றத்தில் தோழியரோடு அமர்ந்து சுவாமிக்கு பூக் கட்டிக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு தோழி "திலகவதி, சுவாமிக்கு தினமும் பூக் கட்டிப்

போடுகிறாயே உனக்கு எப்படிப்பட்ட மணமகனைச் சுவாமி கொடுப்பார்" என்று கேட்டாள்.

வெளியே சென்று வந்த மாதினியின் காதில் இந்தக் கேள்வி விழுந்ததும் மகள் என்ன பதிலைச் சொல்லப் போகிறாள் என்பதை அறிந்து கொள்ளும் ஆவலில் மறைவாக நின்று கொண்டாள்.

திலகவதி சொன்னாள். "பார்த்தால் ஆண் சிங்கம் போல் இருக்க வேண்டும். பகை என்றால் விரட்டுவதில் மாவீரனாக இருக்க வேண்டும், பாராளும் பல்லவ மன்னனின் அன்பையும் மதிப்பையும் பெற்றவனாக இருக்க வேண்டும். பரமசிவன் திருவடியைப் போற்றுவதில் பாருக்கே சிறந்த எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்".

"போதும், போதும் அப்பாடா இத்தனையும் இருந்து விட்டால் உண்மையிலே நீ மாலை கட்டிப் போட்டவனே உனக்கு மணாளனாக வந்தான் என்று பொருள்" என்றாள் இன்னொரு தோழி.

"அப்படிச் சொல்லாதே. எல்லாம் வல்லவர் எம்பெருமான். அவரையும் மானுட மணாளனையும் ஒரே படியில் நிறுத்தாதே. இது பெரும்பாவம். இறைவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன்" என்றாள் திலகவதி.

தன்னுடைய மகளின் விருப்பத்தையும் இறைவன் மேல் கொண்ட பக்தியையும் காது குளிரக் கேட்ட மாதினி கண் குளிர்ந்து பனிக்க நெஞ்சம் நெகிழ்ந்தவளாய் வீட்டினுள்ளே சென்றாள்.

மறுநாளே அந்தி சாயும் நேரம் சீர்வரிசைத் தட்டுகளோடு ஆண்களும் பெண்களும் கூடித் திலகவதியின் வீட்டிற்கு

வந்தனர். குலவைச் சத்தம் கேட்டு வெளியே வந்த புகழனார் அவர்களை வணங்கி வரவேற்றார்.

உள்ளே சென்றவர்கள் சீர்வரிசைத் தட்டுகளை முன்பு வைத்தவராக கூடத்தில் விரித்த பாய்களில் அமர்ந்தனர்.

``புகழனாரே நீங்களும் அமருங்கள்'' என்றார் ஒரு பெரியவர்.

``மாதினியாரையும் கூப்பிடுங்கள்'' என்றார் கூட்டத்தில் இருந்த ஒரு முதியவர்.

மாதினி வந்து சற்றுத் தொலைவில் அமர்ந்து கொண்டாள். மருணீக்கி ஒரு தூணின் பின்னே மறைந்து நின்றவாறு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். திலகவதி அடுப்படியில் அமர்ந்தவாறு வந்தவர்கள் பேசப் போவதைக் கேட்கக் காதுகளைக் கூர்மைப்படுத்திக் கொண்டாள்.

``எப்படித் தொடங்குவது என்றுதான் தெரியவில்லை'' என்றார் வந்தவர்களில் ஒருவர்.

``அகவை பதினான்கு நிரம்பிய மகள் ஒருத்தி தங்களுக்கு இருப்பதாகக் கேள்விப்பட்டோம்'' என்றார் இன்னொருவர்.

``சொல்லுங்கள் மணம் பேசவா வந்திருக்கிறீர்கள்'' என்று கேட்டார் புகழனார்.

``சட்டென்று புரிந்து கொண்டீர்கள்'' என்று ஆரம்பித்து இரு சாராரும் குலம், குடி, தொழில், வளம் என பல்வேறு விடயங்களையும் பேசிப் பரிமாறிக்கொண்டனர்.

"மாப்பிள்ளை பெண்ணைப் பார்க்க வேண்டாமா" என்றார் புகழனார்.

"அவர் ஏற்கனவே திலகவதியைப் பார்த்துவிட்டார்" என்றார் மணமகன் கலிப்பகையாரின் தந்தை.

"எங்கே பார்த்தார், எப்படிப் பார்த்தார்" என்று புகழனார் கேட்டது போலவே அடுப்படியிலும் ஒரு குரல் திலகவதியின் மனதில் கேட்டுக் கொண்டது.

"ஒரு நாள் திலகவதி கிணற்றிலே தண்ணீர் மொண்டு வரும்போது பார்த்ததாக எனது மகன் கூறினான்" என்றார் கலிப்பகையாரின் தந்தை.

"ஓ அவரா" என்றார் புகழனார்.

'அப்பு வேண்டாம் என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள்' என்று வேண்டிக் கேட்டுக் கொண்டது திலகவதியின் உள்ளம்.

"ஆகட்டும் எனக்கும் மணமகனைப் பிடித்திருக்கிறது" என்றார் புகழனார்.

திலகவதி மகிழ்ச்சியில் இருந்த இடத்திலேயே துள்ளிக் குதித்தாள். என்ன நடக்கிறது என்று புரிந்தும் புரியாமலும் மாதினியும், மருணீக்கியும் கவனித்துக் கொண்டிருந்தனர்.

"ஒரேயொரு நிபந்தனை" என்றார் மணமகனின் தந்தை.

சபை மௌனமானது. மணமகனின் தந்தையே தொடர்ந்து பேசினார். "உடனடியாகத் திருமணத்தை நிகழ்த்த முடியாது. வட வேந்தனின் தொல்லை அதிகமாகி இருப்பதால் கலிப்பகை வட நாட்டிற்குப் படை நடத்திச் செல்ல வேண்டும். மன்னர் பணி முடிந்து திரும்பியதும் திருமணத்தை வைத்துக் கௌ்ளலாம்" என்றார்.

"மன்னனுக்காகச் செய்யும் பணி மக்களுக்காகச் செய்யும் பணி. நாட்டுப் பணி. அதை முடித்து, வீட்டுப் பணியாம் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்பது மாப்பிள்ளையின் பேராண்மை. அதை நான் வரவேற்கிறேன். அப்படியே செய்யலாம்" என்றார் புகழனார்.

திருமணம் தள்ளிப் போகிறதே என்ற வாட்டத்தை நோக்கிச் சென்ற திலகவதியின் உள்ளக் கமலம் மன்னனுக்காகப் படை நடத்தும் பணிக்குச் செல்கிறார் என்று நினைக்கும்போது வாட்டம் நீங்கி மீண்டும் மலர்ந்தது.

வரிசைத் தட்டுகளை வைத்து விட்டு வந்தவர்கள் மாதினி படைத்த விருந்தை உண்டு பாராட்டியவாறு கைகளிலே தீப்பந்தம் ஏந்தி விடைபெற்றனர்.

திலகவதி அரை வயிறு சாப்பிட்டு முழு வயிறும் நிரம்பியவளாக படுக்கைக்குச் சென்றாள். தூக்கம் வரவேயில்லை. நினைவுகள் நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தன.

புகழனாருக்கும் மாதினிக்கும் இடையில் படுத்திருந்த மருணீக்கி "அப்பூஉ அக்காவிற்கு எப்போது திருமணம்" என்று கேட்டான்.

‟உனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. நீ பெரிய ஆளாக ஆகி விட்டாய். போருக்குச் சென்ற கலிப்பகை வட வேந்தனின் கொட்டம் அடக்கி திரும்பியதும் திருமணம்″ என்றார் புகழனார்.

‟போரில் தோற்றாலும், வென்றாலும் திரும்புவாரா″ என்றான் மருணீக்கி.

‟வெற்றிதான் பெறுவார். வென்றுதான் திரும்புவார்″ என்றார் புகழனார்.

‟மருணீக்கி பேசாமல் தூங்கு. அப்புவைத் தொந்தரவு செய்யாதே″ என்றாள் மாதினி.

‟குழந்தை கேட்பதில் நியாயம் இருக்கிறது. தெளிவாகப் பதில் சொல்ல நமக்குத்தான் துணிச்சல் இல்லை″ என்றார் புகழனார்.

‟எல்லாம் சுவாமி பார்த்துக் கொள்வார். நீங்கள் தூங்குங்கள்″ என்றாள் மாதினி.

‟எம்பெருமானே இனி எல்லாம் உன் கையில். என் பணி முடிந்தது″ எனக் கூறி கண் அயர்ந்தார் புகழனார்.

திருவாசகம் அருளிய
# மாணிக்கவாசகர் வரலாற்றுக் கதை
நூலிலிருந்து

- சிவபுரம் ஐயா
தம்பிரான்தோழர் கபிலனார்

# உபதேசம் - 1

சீடர்களே நான் சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நான் சொன்னதைத் திரும்பவும் சொல்லச் சொன்னால் சொல்லியும் விடுவீர்கள். நான் சொன்னபடி செய்யச் சொன்னால் செய்தும் விடுவீர்கள். ஆனால் கேட்டதைச் சொல்லாமல் சொன்னதைச் செய்யாமல் என்னைப் போலவே உங்களால் சுயமாகப் பேசவும் செயல் புரியவும் முடியுமா என்றார்.

யாரும் பதில் சொல்லவில்லை. குருந்தம் மேவிய சிவனடியாரே தொடர்ந்து பேசினார்.

இங்குள்ள சிவன் கோவில் எதிரிலே தண்ணீர் இல்லாதபோது நான் தரையிலே ஒருமுறை வெட்டினேன். ஊற்று நீர் சுரந்ததை நீங்கள் எல்லோரும் கண்டுள்ளீர்கள் அல்லவா. அதுபோல என்னுடைய உபதேச மொழிகள் உங்கள் அகத்தைப் பிளந்து ஊற்றாக திருவருளை வெளிப்படுத்தினால் மட்டுமே கேட்டதன் பயனை நீங்கள் அடைவீர்கள்.

இது கேட்ட வாதவூரர் தேம்பித் தேம்பி அழுதார். சுற்றி இருந்த சீடர்கள் அவரைக் கொஞ்சம் வேடிக்கை பார்த்தனர். குருந்தம் மேவிய சீர் பேச்சை நிறுத்திவிட்டு மௌனமாக கண்களை மூடிக்கொண்டது.

# திருவண்ணாமலை மகிமை

நூலிலிருந்து

- சிவபுரம் ஐயா
தம்பிரான்தோழர் கபிலனார்

# மாணிக்கவாசகரோடு நமச்சிவாய கிரிவலம்

'நமச்சிவாய வாழ்க' என்று சிவன் நாமத்தைச் சொல்லிக்கொண்டு திருவண்ணாமலை கிரிவலத்தை ஆரம்பித்தேன். எங்கிருந்து வந்தது இந்த நாமம் என்று எண்ணியபோது அவனுடைய பாதச் சிலம்பொலி கேட்டது. அங்கிருந்துதான் வந்தது என்று எண்ணியவாறு 'நாதன் தாள் வாழ்க' என்றேன்.

வலதுபுறம் பார்த்தால் சிலம்போசை எதிரொலித்து என்னிடம் வந்து சேரக் காரணமான மலை இருந்தது. அடியைப் பார்த்தால் எங்குமே மலையின் அடி. இடையைப் பார்த்தால் எங்குமே மலையின் இடை. நுனியைப் பார்த்தால் முகில் கூட்டங்கள் சூழவும் வலம் வந்து கொண்டிருக்கும் வானத்தைத் தொடுமோ தொடர்ந்து செல்லுமோ என்று எண்ணும் முகில் சூழ்ந்த முடி.

எங்கும் நிறைந்த மலையின் உருவம் இப்போது என் நெஞ்சிலும் நிறைந்திருந்தது. 'இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்று போற்றினேன்.

வலதுபுறம் அண்ணாமலை என்னும் அருட்பெருங்கடல். இடது புறம் வண்டி, வாகனம், வீடு, வாசல், கடை வியாபாரம் என எங்கும் நிறைந்த சம்சாரக்கடல்.

எந்தக் கடலில் குதிப்பது எப்படிக் கரையேறுவது என்று எண்ணியபோது பெருந்துறையிலே அவன் குருவாக வந்தாற்போல் என் உள்ளே வந்தான். `கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க' என்றேன்.

வந்தவன் சும்மா நிற்காமல் உபதேசங்களை அடுக்கினான். அவற்றின் மொழிப் பொருள் எனக்கு வெளிப்பட தோன்றவில்லை. ஆனால் அது என்னை மேலும் மேலும் அவன் திருவடிக்கு அருகாக அழைத்துச் செல்வதை மட்டும் உணர முடிந்தது. `ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க' என்று போற்றினேன்.

மலை என்றால் ஒன்றாக நின்றான். மலையிலே என்றால் தாவரம் முதலான உயிருள்ளன உயிரற்றன யாவும் நிறைந்து பலவாக நின்றான். அதே மலை என்னுடைய அகத்திலே இறைவனாக நின்றது. `ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க' என்று போற்றினேன்.

கால்கள் தானாகவே வேகத்தைக் குறைத்தன. மெத்து மெத்தென்று பாதங்கள் மண்ணில் பதியும்போது இதயத்துப் பொந்திலே தேன் சுரந்தது. ஓடிக்கொண்டிருந்த மனம் அவன் அருளை கூடிக் களிக்கும் இடத்திலே உறைந்து போனது. என்னைத் தடுத்தாட்கொண்ட அந்த வள்ளலை `வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க' என்று போற்றினேன்.

வேகத்தை வென்றான். மனதை வென்றான். மன ஓட்டங்களை வென்றான். நான் என்ற அகந்தையை வென்றான். அவன் என்னை வென்று விட்டான். அந்த வெற்றி என்னைப் பேரின்பக் கடலில் மூழ்கச் செய்தாற் போல் இருந்தது, இப்படியே என் பிறப்பு அறுந்து போகுமோ என்ற எண்ணத்தில் `பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க' என்றேன்.

இடது புறம் பார்த்தேன். எதுவுமே அறியாதவர்களாக மலையாக நிமிர்ந்து நிற்கும் அந்தச் சிவத்தை ஒரு பொருட்டாகவே நினைக்காமல், மதிக்காமல் உலகியல் வாழ்வில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தார்கள்.

அண்ணாமலையைத் தழுவிய தென்றல் என்னையும் தழுவியது. மெய் சிலிர்த்தேன். அது அவனைப் பற்றி சற்றுமே எண்ணாத உலகியலில் மூழ்கி நிற்கும் புறத்தாரையும் தழுவியது. முந்தானையையும், துண்டையும் இழுத்துப் போர்த்திக் கொண்டார்கள்.

அவனை மறந்தார்க்கும் அவன் இந்தத் தென்றல் போல அருளிக்கொண்டே இருக்கிறானே என்று எண்ணியபோது அவனுடைய பாதத்தின் மென்மை என் நெஞ்சினிலே தென்றல் பட்டாற் போல் இருந்தது. `புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க' என்றேன்.

`அண்ணாமலைக்கு அரோகரா' என்று உரக்கக் கூவிக் கொண்டேன். கரங்களைச் சிரம் மேல் கூப்பி நிற்போர் நெஞ்சம் நெகிழ்ந்து கண்ணீர் சொரிந்தனர். `கரங்குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க' என்றேன்.

`அண்ணாமலையார் அடிக்கமலம் சென்றிறைஞ்சும் விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்

போல் தண்ணார் ஒளி மழுங்கி தாரகைகள் தாமகல’ என்று அண்ணாமலையாரை மாணிக்கவாசகர் போல் பாடிச் செல்வோர் தம் அறிவின் சிறுமை உணர்ந்து அந்தப் புலனறிவை அவர் திருவடியில் மண்டியிடச் செய்து பணிந்தனர்.

அறிவினால் உலகியல் இன்பங்களை அடையாமல் அதை இறைவன் திருவடியில் சமர்ப்பித்து அவனருளால் விளையும் மெய்யறிவையும் ஞானத்தையும் வெளிப்படுத்தி வாழும் வாழ்வை வாழும் சான்றோர் போல் யானும் வாழ விரும்பினேன். ‘சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க’ என்று போற்றினேன்.

அதற்கு மேல் இன்னதென்று அறியாமல் எடுத்து விளக்க முடியாமல் ‘ஈசனடி போற்றி எந்தையடி போற்றி தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி நேயத்தே நின்ற நிமலனடி போற்றி மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி ஆராத இன்பம் அருளும் மலை போற்றி’ எனப் போற்றினேன். அந்த மலையைப் பார்த்தபடி நடையை நிறுத்திக் குத்திட்ட கண்களோடு நின்றேன்.

‘ஆராத இன்பம் அருளும் மலை போற்றி ஆராத இன்பம் அருளும் மலை போற்றி’ என மீண்டும் மீண்டும் உரக்க உரக்க கூவினேன்.

மலை உச்சி முகிலை கிழித்துக் கொண்டு மெல்ல வெளிக் கிளம்பிய நிலா என் நிலையை எனக்கு உணர்த்தியது.

சிவபெருமான் என் சிந்தைக்குள்ளே வந்து விட்டான். அவனருள் இனி எனக்குக் குறைவில்லாமல் கிடைக்கும்.

அந்த அருளைக் கொண்டு எந்தப் பொருளையும் நாடாமல் அவன் அருளையே நாட வேண்டும். அந்த அருளின் துணையால் அவன் அடிகளையே வணங்க வேண்டும். அவனடிப் பேறின் சிதறல்கள் என் சிந்தையில் தெறித்துப் பட்டுச் சிந்தையை மகிழ்விக்க வேண்டும்.

அத்தகைய மகிழ்ச்சியை மேலும் மேலும் பெருக்கியவாறு சிவபெருமான் வரலாற்றையும் பெருமைகளையும் கூற வேண்டும். அவ்வாறு என்னுடைய பழைய வினைகள் எல்லாம் தீரும் வரை கூறிக் கொண்டே இருக்க வேண்டும் என நினைத்த போது ‘சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவனருளாலே அவள் தாள் வணங்கிச் சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்’ என்று என் நா உளறியது.

நான் அண்ணாமலை நோக்கி நெடுஞ்சாண் கிடையாகத் தரையிலே விழுந்து வணங்கி ‘முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்’ ‘முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்’ என்று மீண்டும் மீண்டும் கூறி என் இரண்டு கைகளாலும் அடிவாரத்து மண்ணில் ஓங்கி ஓங்கி அடித்து சத்தியப் பிரமாணம் செய்து கொண்டேன். வானத்திலிருந்து தோன்றிய வானவில் வண்ணங்கள் மலை மேல் தோரணங்களாகத் தொங்கின. எண்ணிப் பார்க்க முடியாத எழில் மிகுந்த அவன் திருவடிப் பிரகாசமோ அல்லது நெற்றியிலே விளைந்த மூன்றாவது கண்ணின் ஞானஒளிப் பிரவாகமோ என்று எண்ணினேன்.

பிரவாகம் மலையைச் சூழ்ந்து தொங்கிய நிலையிலிருந்து விண்ணுக்கும் மண்ணுக்கும் பரவி எங்கும் நிறைந்தது. இந்தப் பெருமையை என்னவென்று சொல்வது என்று திகைத்தவாறு எழுந்தேன். ‘கண்ணுதலான் தன்கருணை

கண்காட்ட வந்தெய்தி எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் எண்ணிறந் தெல்லையிலாதனே நின் பெருஞ்சீர் பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்' என்று கூறியவாறு மார்பினைக் கைகளால் அழுத்தி மூடி மெதுவாக மேலைத் தசையைப் பிசைந்தவாறு மெல்ல மலை வலத்தைத் தொடர்ந்தேன்.

மலையை வலம் வரும் யானே இத்துணை பேரருள் சிறப்புகளை எல்லாம் அடையும்போது மலையிலே வாழும் உயிரினங்கள் எவற்றையெல்லாம் அடையுமோ என்று எண்ணியபோது 'ஊறி நின்றென்னுள் எழுபரஞ்சோதியாக' எழுந்த குருமணி சிவபெருமான் தமிழாலே பதில் உரைக்கலானான்.

'புறத்திலே என்னோடு இருப்பதால் எதையும் அடைய முடியாது. அகத்திலே என்னோடு இருப்பவனே எல்லாவற்றையும் அடைகிறான்'.

மலையில் இருக்கும் புல், பூண்டாக முளைத்திருந்தால் கொஞ்சம் நிமிர்ந்து நிற்கலாமே என்று நினைக்கும்.

பூண்டாக முளைத்திருப்பது புழுவாய் பிறந்திருந்தால் அங்குமிங்கும் நகரலாமே என்று நினைக்கும்.

புழுவாகப் பிறந்திருப்பது மரமாகப் பிறந்திருந்தால் உறுதியாக இருந்திருக்கலாமே என்று நினைக்கும்.

மரமாகப் பிறந்திருப்பது விலங்குகளாகப் பிறந்திருந்தால் அங்குமிங்கும் நடமாடலாமே என்று நினைக்கும்.

விலங்காய்ப் பிறந்திருப்பது பறவையாகப் பிறந்திருந்தால் பல இடங்களுக்கும் வேகமாகப் பறந்து செல்லலாமே என்று நினைக்கும்.

பறவையாய் பிறந்திருப்பது பலரிடமும் அடிபட்டுச் சாகாமல் இருப்பதற்கு பிறரைக் கடித்துக் கொல்லும் பாம்பாக பிறந்திருக்கலாமே என்று நினைக்கும்.

பாம்பாகப் பிறந்திருப்பது பலரும் வந்த இடத்தில் அடித்துக் கொல்வதால் எப்படி அடித்தாலும் அசையாத கல்லாகப் பிறந்திருக்கலாமே என்று நினைக்கும்.

கல்லாகப் பிறந்தது ஏன் இப்படிப் பல பிறவியும் எடுக்கிறோம் என்ற கேள்விக்குப் பதிலைக் கண்டறிய வல்ல பிறவியை வேண்டி மனிதனாகப் பிறக்கும்.

மனிதனாகப் பிறந்தவன் அனுபவித்து முடிக்க விரும்பாமல் பல கூட்டிலும் நுழைந்து அனுபவிப்பதற்குப் பேயாகப் பிறப்பான்.

பேயாகப் பிறந்தது அதிகாரத்தை வேண்டி பூத கணமாகப் பிறக்கும்.

பூத கணமாகப் பிறந்தது கட்டில்லா அதிகாரத்தை வேண்டி அசுரனாகப் பிறக்கும்.

அசுரனாகப் பிறந்தது கௌரவத்தை வேண்டி முனிவனாகப் பிறக்கும்.

முனிவனாகப் பிறந்தது இறை அந்தஸ்தை வேண்டி தேவராகப் பிறக்கும்.

இப்படியே இல்லாததை நினைத்து அதைப் பெற வேண்டி நினைக்குமேயல்லாமல் என்னை நினைக்கவும் நினைக்காது என் அடியை சேரவும் சேராது என்றது உள்ளிருந்த வந்த சிவமான குருவின் குரல்.

அவர் சொன்னதை வரிசைப்படுத்தி மீண்டும் நான் சொல்லிப் பார்த்தேன்.

‘புல்லாகிப் பூண்டாகி புழுவாய் மரமாகி பல்விருகமாகி பறவையாய் பாம்பாகி கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய் வல்அசுரராகி முனிவராய் தேவராய்’ என்று கூறிய நான் ஆஹா இந்தப் பிறவிப் பெருங்கடலில் மீண்டும் மீண்டும் பிறந்து உழன்று அவனை நினைந்து இன்றுதானே அவன் அடியைக் கண்டு உய்ந்தேன் என்பதை ‘செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான் மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்’ என்று கூறி நின்று மலையை விழுந்து வணங்கினேன்.

இல்லாமையால் கட்டுண்டவனே அதைத் தேடுவான். அடக்குமுறையால் கட்டுண்டவனே விடுதலையைத் தேடுவான். அதுபோல என்னையும் இந்த உலகத்தில் பல்வேறு பற்றாக்குறைகளாலும் சுதந்திரத் தடைகளாலும் கட்டிப் போட்டு அதன் விளைவாக இன்று இந்த அண்ணாமலை கிரிவலத்திற்கு அழைத்து வந்தான்.

இதுபோலவே அவன் ஓங்காரத்தால் கட்டிப்போட்டு அதை அவிழ்த்துப் பிறவிப் பெருங்கடலைக் கடந்து மெய்யான தன்னை உணரும்படி செய்கிறான் என்று எண்ணும்போது ‘உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா’ என்று சொன்னேன்.

அத்தோடு நிற்காமல் என் நா `விமலா விடைப்பாக வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா' எனப் பலவாறு புகழ்ந்துரைக்கும் நாவலத்தோடு சேர்ந்து கிரிவலமும் நடந்தது.

பிரணவக் கட்டவிழ்ந்து பொய்யான தேடல் எல்லாம் கழிந்து நிற்கும் வேளையில் மெஞ்ஞானமாக வந்து அருள்பவனே என்பதை `பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே' எனக் கூறினேன்.

தொடர்ந்து கால்கள் முட்டி போட்டன. மலையை நோக்கி மண்டியிட்டேன். எனக்கு எந்த ஞானமும் இல்லை. நீயே அஞ்ஞானம் என்னும் அறியாமையைப் போக்குபவன். மெஞ்ஞான வடிவானவன். எனக்கும் அந்த ஞானத்தை அருள வேண்டும் என்பதை `மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே' என மீண்டும் மீண்டும் வேண்டினேன்.

அண்ணாமலை அரசே நீ அறிவினால் அளந்தறிய முடியாதவன் என்பதை பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் நிரூபித்ததன் மூலம் யாவருக்கும் நிரூபிக்கும் வண்ணம் இங்கு மலையாக நின்று கொண்டிருக்கிறாய். உன்னை எப்படி அளப்பனோ என்று எண்ணியவாறு `ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்' எனக் கூறினேன்.

அப்படியானால் என்னை எங்கு வைத்தாயோ என்ற எண்ணம் குறுக்கிட்டு அதையும் அளந்தறிய முடியாது

என்பதால் உன் பணியில் ஒத்துப்போகும் வண்ணம் வைத்தால் போதும் என்பதை ‘போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்’ என்று வேண்டிக்கொண்டேன்.

மீண்டும் ஓர் அருட்தென்றல் என்மேல் மோதியது. தென்றலோடு பூக்களின் நறுமணமும் சேர்ந்து கொண்டது. இதுபோலத்தான் மலரான நீ எங்கிருந்தாலும் மணமாக எங்கும் நிறைந்திருக்கிறாய் என்பதை ‘நாற்றத்தின் நேரியாய்’ என விளித்தேன்.

நீ தொலைவிலும் இருப்பாய் பக்கத்திலும் இருப்பாய் என்பதை ‘சேயாய் நணியானே’ எனக் கூறினேன்.

ஆனால் எப்போதும் மறைந்தே இருந்த நீ இன்று மன ஓட்டம் நின்ற போது வெளிப்பட்டாற் போல் வெளிப்படுவாய் என்பதை ‘மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே’ என்று விளித்தேன்.

இன்று என் உள்ளத்தின் உள்ளே நோக்கும் போது கறந்த பாலிலே வெண்மையைத் தவிர வேறொன்றும் வெளிப்படத் தோன்றாத நிலையில் இனிப்புச் சுவையும் நெய்யும் கலந்திருப்பதை யார் அறிவார்.

பாலைக் காய்ச்சி உறையிட்டுத் தயிராக்கி மத்தால் கடைந்து மோரையும் வெண்ணெயையும் பிரித்தெடுத்து அந்த வெண்ணெயைக் காய்ச்சினாரே நெய்யை அறிவதுபோல் மெய்யை அறிவர்.

அதுபோல ஊனினை உருக்கி உள்ளத்து உணர்வினைக் கடைந்து நின்றும் அடியார் நெஞ்சில் தேனாக ஊறுவது சிவம்.

அவ்வாறு ஊறி அது பிறந்த பிறப்பு அறுக்கும் என்பதை `கறந்த பால் கன்னலோடு நெய் கலந்தாற் போல சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்' என்று பாடிக்கொண்டே நடந்தேன்.

தேவர்களுக்கு மறைவாக இருந்த எம்பெருமான் எனக்கும் ஏன் மறைவாகவே இருந்தான் என்று எண்ணியபோது எதிரில் வந்த ஒருவர் சரியாக என்னைக் கவனிக்காமல் என் மேல் மோதினார்.

"ஏன் என்னை மோதுகிறீர்கள்" என்று கேட்டேன். தாடியும், சடாமுடியும் உருத்திராக்கமும், திருநீறும் எனச் சிவக்கோலமாக விளங்கிய அந்தப் பெரியவர் "நான் எங்கே உன் மேல் மோதினேன். என்னுடைய உடல்தான் உன்னுடைய உடல் மேல் மோதியது" என்றார்.

என்னை அறியாமலே என் கைகளைக் கூப்பி அவரை வணங்கினேன். அவர் மேற்கொண்டு எதுவும் பேசாமலே விலகி நடந்து சென்றார்.

இந்த உடலினுள் சிக்குண்டதால்தான் அவன் மறைந்திருக்கிறான் என்பதை உணர்ந்தேன். உடல் என்னும் இந்த மாயையில் சிக்குண்டிருப்பதால்தான் பல காலம் இந்த அடிவாரத்தில் வலமாகச் சென்ற போதும் உன்னை நினைக்க மறந்திருந்தேன்.

இந்த உடற்கூற்று வண்ணம் வேடிக்கையான இருள் என்பதை நினைத்து எம்பெருமான் `வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாயவிருளை அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி புறந்தோல் போர்த்தெங்கும்

புழு அழுக்கு மூடி மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய விலங்கு மனத்தால் விமலா உனக்குக் கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும் நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி' என்று சொன்ன போது சற்று முன் என் மேல் மோதி உண்மையை உணர்த்திச் சென்றவர் சிவபெருமான்தானோ என்ற ஐயம் தோன்றிதும் நம்பிக்கை தோன்றவில்லையே என்ற இழிவான என் நிலையை நினைத்து 'நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு' என்று உரைத்தேன்.

என்னுடைய இந்த கேவலத்தையும் பொருட்படுத்தாமல் வந்து அருளினானே என்று அவனை நினைத்தபோது 'தாயிற் சிறந்த தயாவான தத்துவனே' என்று சொன்னேன்.

இந்த வரி அவன் பெருமையை சொல்லப் போதாது என்ற ஏக்கத்தோடு தொடர்ந்து பிறந்த 'மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே தேசனே தேனார் அமுதே சிவபுரனே பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப் பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே அன்பர்க்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய் சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே' எனப் போற்றினேன்.

போற்றிப் போற்றிப் புகழ்ந்தேன். புகழ்ந்து புகழ்ந்து நினைந்து நடந்தேன். நினைந்து நினைந்து நினைந்து உருகி நடந்தேன். உருகி உருகி அவன் திருவுருவை வணங்கி நடந்தேன்.

ஐம்பூத இயக்கத்தில் மறைந்திருந்து இயக்கும் ஒலி, ஒளி, வெப்பம், மின் போன்ற ஆற்றல்களைப் பற்றிய அறிவு விஞ்ஞானம்.

மனிதனுக்குள்ளே மறைந்திருந்து இயக்கங்களை முன்னெடுக்கும் அறிவு முதலான சூக்கும சக்தியைப் பற்றியது மெஞ்ஞானம்.

கூர்மையான மெஞ்ஞான அறிவுள்ளோர் மட்டுமே தமக்குள்ளேயிருந்து சூக்குமமான இயக்கங்களைப் புரிந்துகொண்டிருக்கும் திருவருள் சக்தியை அறிவர்.

அவ்வாறு அறிந்தவர்கள் அதே ஞானத்தால் நுணுகி உணரும்போது ஆனந்தப் பேருணர்வாய் உள்ளிருக்கும் சிவம் அறியப்படுகிறது. என்பதை 'கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே' என்று கூறினேன்.

அவ்வாறு அறியப்படும் உணர்வு சட்டென்று தோன்றி மறையும் காட்சிகள்போல் தோன்றி மறையுமோ என்று எண்ணியபோது அது போவதுமில்லை, வருவதுமில்லை, மாறுவதுமில்லை, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காமல் இருந்து கொண்டேயிருக்கிறது. அவ்வாறு இருந்தால்தான் இடையறாமல் என்னைக் காப்பதும் சாத்தியமாகும் என்று எண்ணியபோது மெய் சிலிர்த்தது.

'போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்' என்று வியந்து கூறிக்கொண்டேன்.

போக்கும் வரவும் புணர்வுமில்லாத மாறாத சிவம் காலங்கள் தோறும் மாறிக் கொண்டேயிருக்கும் இவ்வுலகை எவ்வாறுதான் காப்பாற்றுமோ என்று எண்ணியபோது அகத்திலே மாறாத ஆனந்த உணர்வாய் இருக்கும் சிவம் புறத்திலே காலத்திற்கு ஏற்ப மாறுபட்டுத் தோன்றுகிறது என்பதை 'மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்' என்று கூறினேன்.

புறத்திலே தோன்றி அகத்திலே உணர்த்தி அறியாமையிலிருந்து தேற்றி தெளிவை ஊட்டி எனக்குள்ளே ஊறிக்கொண்டிருக்கும் அமுதமாய் இருந்தபோதிலும் அந்த அமுதச் சுவையை உணர முடியாத வண்ணம் மாறுபட்ட விகார உணர்வுகளை ஏற்படுத்தி வருந்தச் செய்துகொண்டிருக்கிறதே இந்த உடல் என்று எண்ணினேன், வருந்தினேன்.

'தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள் ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்றேனெம் ஐயா' என்று அலறினேன்.

அரனே உன் புகழை ஓங்கி உரைப்பதைத் தவிர வேறு என்ன செய்ய வல்லேன். அப்படியே உன்னைப் போற்றிப் புகழ்ந்து கொண்டேயிருக்கிறேன். என்னுடைய பொய்யெல்லாம் கெட்டு மெய்யாகும் வரை போற்றிப் புகழ்ந்து கொண்டேயிருக்கிறேன்.

அவ்வாறு பொய்கெட்டு மெய்யானார் திரும்பவும் இங்கு வந்து பிறவா வண்ணம் கல்லப் புலக்குரம்பை கட்டழித்து காப்பாய் என்று எண்ணியபோது 'அரனேயோ என்றென்று போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார் மீட்டிங்கு

வந்து வினைப்பிறவி சாரமே கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே’ என்று கூறினேன்.

மீண்டும் இங்கு வந்து பிறவாதிருக்க வேண்டுமெனில் இந்தக் கட்டுடலை அழித்தால்போதாது. ஐம்பூதங்களாலான கட்டுடலைக் கத்தியால் வெட்டியும் துப்பாக்கியால் சுட்டும் நாய்க்கும், நரிக்கும் இரையாக்கலாம். ஆனால் ஐம்புலன்களால் உருவாக்கப்பட்ட புலக்குரம்பை என்னும் சூக்கும உடலை யாராலும் அழிக்க முடியாது, எமனாலும் அழிக்க முடியாது.

அந்தக் கள்ளப் புலக்குரம்பை உயிரைச் சூழ்ந்திருக்கும் வரை பிறவிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அந்தச் சூக்குமமான கள்ளப் புலக்குரம்பையைக் கட்டழித்துப் பிறவிப் பெருங் கடலிலிருந்து நம்மை மீட்க வல்லவன் ஒரே ஒருவன். அவனே சிவபெருமான் என்று எண்ணியபோது வானத்திலிருந்து ஒரு பெரிய மழைத்துளி உச்சியிலே விழுந்தது.

‘கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே’ என்று கூறிக்கொண்டு நான் நடந்தேன்.

பொருளை மறைக்கும் இருள் புறத்திலே தோன்றும் இருள். காட்சியை மறைக்கும் இருள் கண்ணிலே தோன்றும் இருள். சிந்தனையை மறைக்கும் இருள் மனத்திலே தோன்றும் இருள். மெய்யையை மறைக்கும் இருள் அகத்திலே உள்ளத்து உணர்வில் தோன்றும் இருள். அந்த இருளை விடவும் அடர்ந்த பேரிருள் எங்குமே இல்லை.

அந்த நள்ளிருளிலும் ஒருவன் நின்று நான் உய்யும் பொருட்டு நடமாடிக் கொண்டிருப்பான் என்று

எண்ணியபோது வானம் தூறல் போடத் தொடங்கியது. ‘நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே’ என்று கூறியவாறு நடந்தேன்.

தில்லையிலே அவனை அம்பலத்தில் மாணிக்கவாசகன் கண்ட காட்சி நினைவிற்கு வந்தது. ‘தில்லையுள் கூத்தனே’ என்றேன்.

அவன் வைகையிலே பெரு வெள்ளமாகவும் நரியைப் பரியாக்கித் தானே பரியோட்டியாகவும் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்ட கூலியாகவும் வந்து மாணிக்கவாசகருக்கு அருளியதை நினைத்தேன். ‘தென்பாண்டி நாட்டானே’ என்றேன்.

உன்னை விட்டால் யார் இருக்கிறார் துன்பம் தீர்ப்பதற்கு என்று எண்ணி ‘அல்லல் பிறவி அறுப்பானே’ என்றேன்.

மலையில் ஒளிக்கோடாகப் பெரு மின்னல் தெறிக்கப் பேரிடி இடித்தது. ‘ஓவென்று’ என்றேன்.

அல்லல் பிறவி அறுப்பானை அடைவது எவ்வாறு என்று எண்ணியபோது ‘சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து’ என்று சொன்னேன்.

பெரிய கோவில் வாசலில் எரிந்துகொண்டிருந்த கற்பூரச் சட்டிக்கு எதிரே நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினேன்.

**கிரிவலம் நிறைவு பெற்றது.**



## தம்பிரான்தோழர்
## சுந்தரர் வரலாற்றுக் கதை நூலிலிருந்து

- சிவபுரம் ஐயா
தம்பிரான்தோழர் கபிலனார்

# காட்டுப் பன்றி வேட்டை

அரண்மனை வாழ்வில் நம்பியாரூரரின் விழிகள் தேடியதைத் தொடர்ந்து தேடிக்கொண்டே இருந்தன. விற்போர், வாட்போர், மல்யுத்தம், குதிரையேற்றம், யானையேற்றம், ஏறு தழுவுதல் எனப் பலவிதமான வீர விளையாட்டுகளிலும் நம்பியாரூரன் பயிற்சி பெற்று முன்னிலை வகித்தான். நம்பியாரூரன் இலக்கணம், இலக்கியம், நாட்டியம் நாடகம் எனப் பலவிதமான கலைகளிலும் பயிற்சி பெற்று திறமுடன் திகழ்ந்தார். நம்பியாரூரர் வளர்ந்து வளரிளம் பருவத்தை அடைந்தான்.

நம்பியாரூரனுக்கு இளவரசர் பட்டம் கட்டித் தனக்குப்பின் மன்னராக்கலாமா என்று நரசிங்க முனையரையர் தனிமையில் தீவிரமாகச் சிந்தித்தார்.

நம்பியாரூரர் மன்னருக்கு வேண்டிய சாணக்கியம், பல்துறை அறிவு, வித்தைகளில் தேர்ச்சி ஆகியவற்றைக் கொண்டிருந்தாலும் அவர் உயிர்கள் மேல் காட்டும் மிகுதியான அன்பு மன்னர் பதவியை இவருக்குக் கொடுத்தால் இவர் எப்போது வேண்டுமானாலும் அதைத்

துறந்துவிடுவார் என்ற எண்ணத்தை நரசிங்கமுனையரையருக்கு ஏற்படுத்தியது.

நம்பியாரூரர் மகளிருடன் இணைந்து செயல்படுவதில் ஆர்வம் காட்டி வந்தார். அரண்மனைப் பூந்தோட்டத்தில் மகளிர் கூட்டமாகப் பூப்பறிக்கும்போது நம்பியாரூரரும் தவறாமல் பூப்பறிக்க சென்று விடுவார். மகளிர் விளையாட்டை பெண்கள் விளையாடும்போது ``நான் நடுவராக இருக்கிறேன்'' எனக் கூறி நம்பியாரூரர் நடுவராக பணியாற்றுவார்.

இவ்வாறு நிலைமை இருக்கும்போது நரசிங்க முனையரையரின் அவையிலே காட்டுப் பன்றிகள் வயலில் புகுந்து மரவள்ளிக்கிழங்கு, இராசவள்ளிக்கிழங்கு, சக்கரைவள்ளிக்கிழங்கு, வேர்க்கடலை போன்ற பயிர்களை கிண்டிக் கிளறி உண்பதோடு அழித்துவிடவும் செய்கின்றன. இதற்கு மன்னர்தான் ஒரு தீர்வு கண்டு உழவர்களின் வாழ்வை காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கை வந்தது.

மன்னர் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஊர்மக்கள் பலருடனும் பழகலாம் என்று எதையோ தேடிக்கொண்டிருக்கும் உள்ளுணர்வால் உந்தப்பட்ட நம்பியாரூரர் ``இந்தச் சிக்கலை நான் தீர்த்து வைக்கிறேன் மன்னா'' என்றார்.

மன்னர் மகிழ்ச்சியுடன் அனுமதித்தார். மேலும் ``வேண்டிய வீரர்களை அழைத்துக் கொண்டு ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு வேட்டைக்குச் செல்லலாம்'' என்று கூறினார்.

நம்பியாரூரர் பொழுது சாயும் வேளையில் வீரர்களுடன் புறப்பட்டு காட்டுப் பன்றிகள் புகுந்து வயலை சேதப்படுத்தும் இடத்தை நோக்கிச் சென்றார். உழவர்களின் ஊரை அடைந்ததும் அவ்வூர் மக்கள் எல்லோரும் நம்பியாரூரைப் பார்ப்பதற்காகக் குழுமிவிட்டனர்.

நம்பியாரூரைப் பார்த்த மக்கள் காட்டுப் பன்றிகள் செய்யும் தொல்லைகளைப் பலவிதமாகச் சிலாகித்துக் கூறினர். சிலர் தங்கள் பயிரை பன்றிகள் முற்றிலுமாக அழித்துவிட்டன எனக் கூறிக் கண்ணீர் வடித்தனர்.

கண்ணீரைக் கண்டதும் நம்பியாரூரரின் நெஞ்சம் இளகியது. 'இவர்களுக்குத் துன்பம் செய்யும் பன்றிகளை இன்றோடு முற்றுமாக அழித்துவிட வேண்டும்' என்று சங்கற்பம் செய்துகொண்டார்.

அடுத்த கணமே "உழவர் பெருமக்களே ஆண்கள் எல்லோரும் ஆளுக்கொரு தீப்பந்தத்தை ஏந்திக்கொண்டு என்னோடு வாருங்கள்" என்றார் நம்பியாரூரர்.

பெண்கள் வீடுகளில் தங்கிவிட ஆண்கள் தீப்பந்தம் ஏந்தி கூட்டமாகப் புறப்பட்டனர்.

பன்றிகள் நிலத்தைத் தோண்டும் ஓசை கேட்ட நம்பியாரூரர் அந்த ஓசையை அம்பால் எய்தார்: பன்றி வீழ்ந்தது. ஓசையை எய்து பன்றியை வீழ்த்தும் நம்பியாரூரரின் விற்போர் திறனைக் கண்டு மக்கள் எல்லோரும் ஆரவாரித்தனர்.

"நம்பியாரூரர் வாழ்க" என்று ஊரார் கோசம் எழுப்பினர். அவ்வாறு தொலைவில் நின்றே முடிந்தவரை பன்றிகளை வேட்டையாடிய நம்பியாரூரர் அதற்குப் பின் முன்னேறிச் சென்று காட்டின் எல்லையில் பன்றிகளின் சலசலப்புக் கண்டு அத்திசை நோக்கித் தீப்பந்தங்களை விட்டெறிய வைத்தார். பன்றிகள் காயமடைந்து காட்டுக்குள் தப்பி ஓடின.

``இனிமேல் சூடு கண்ட, இந்தப் பன்றிகள் உங்கள் வயலைத் தேடி வரமாட்டா" என்றார் நம்பியாரூரர்.

மக்களை கலைந்து போகலாம் என்று வீடு நோக்கிச் செல்ல வைத்தார். தான் மட்டும் குதிரையிலேறி வீழ்ந்து கிடந்த பன்றிகளைப் பார்த்தவாறே சென்றார்.

``இவற்றை அரண்மனைக்கு எடுத்துச் செல்லலாமா" என்று வீழ்ந்த பன்றிகளை சுட்டிக் காட்டினர் கூட வந்த வீரர்கள்.

``வேண்டாம் இவற்றினால் துயரம் அனுபவித்த உழவர்களே இவற்றை எடுத்து உணவாகவும், தோலாகவும் பயன்படுத்தட்டும். அப்படியே விட்டு விடுங்கள்" என்றார் நம்பியாரூரர்.

தீடிரென நம்பியாரூரரின் குதிரை நின்றது. ஏன் நிறுத்துகிறார் என்று வீரர்கள் யாவரும் சூழ்ந்து நின்று பார்த்தனர். நம்பியாரூரரின் விழிகள் வேட்டையில் வீழ்ந்த காட்டுப்பன்றி ஒன்றைப் பார்த்தன.

அது பெண் பன்றி என்பதை அவர் அறிந்து கொண்டார். எவ்வாறெனில் குட்டிகள் உயிரற்ற தாயின் முலையில்

பால்குடித்ததைக் கண்டு, நம்பியாரூரரின் கண்கள் நீரைச் சொரிந்தன. துக்கம் நெஞ்சைப் பிசைந்தது.

சிவபெருமான் தாய்ப்பன்றி இறந்தபின் தானே தாய்ப்பன்றியாக வந்து பசியிலே தவித்த பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த திருவிளையாடலை நினைந்தார். அது போல் இப்போதும் வரமாட்டாரா என்று தனக்குள்ளே ஒரு கேள்வியை எழுப்பினார்.

கண்களை மூடி திருநாவலூர்ப் பெருமானைத் தியானித்தார். தன்னால் இந்தத் துயரத்தைத் தாங்க முடியவில்லையே என்று வெதும்பினார்.

நம்பியாரூரரின் கண்ணீர்த் துளிகளோடு இணைந்து வானத்து மழைத்துளிகளும் விழத் தொடங்கின. சற்றே மழை வலுத்த போது எதிர்பாராத விதமாக இறந்து கிடந்த பன்றி எழுந்து ஓடியது.

ஓ.... ஓ..... இந்த பன்றி இறக்கவில்லைப் போலும். மயங்கி கிடந்திருக்கிறது. அதனால்தான் மழைத்துளிகள் மேலே விழுந்ததும் மயக்கம் தெளிந்து எழுந்துவிட்டது என அகம் மகிழ்ந்தார். ஆனந்தம் கொண்டு எம்பெருமானை உள்ளத்தினுள்ளே பலவிதமாகப் போற்றினார்.

மயங்கிக் கிடந்த பன்றியை எழுப்பினாயோ, இல்லை இறந்த பன்றியைத்தான் உயிர்ப்பித்தாயோ. எதுவானாலும் எனக்கு மகிழ்ச்சியே என சிவனாரிடம் கூறினார். தன் மனம் மேற்கண்டவாறு இரண்டு பட்டு சிந்திக்க காரணம் என்னவென்று தன்னுடைய அறிவைக் கொண்டு தனக்குள்ளே தேடினார்.

"அடுத்துச் சென்றால் கரும்புத்தோட்டமும் வாழைத்தோப்புகளும் தான் இருக்கும். அங்கே யானைகளின் தொல்லைகள்தான் அதிகமாக இருக்கும்" என்றான் ஒரு வீரன்.

"அதை நாளைக்குப் பார்க்கலாம்" என்று கூறியவாறு தன்னுடைய குதிரையைத் திருப்பினார் நம்பியாரூரர். வீரர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர்.

அரண்மனைக்கு வந்த நம்பியாரூரர் காலையில் மன்னரைப் பார்க்கலாம் எனக் கருதி இரவு உணவை அருந்திவிட்டு தூங்கச் சென்றார்.

நள்ளிரவு கடந்த வேளையிலும் வேட்டையாடி களைப்பாய் இருந்தபோதிலும் நம்பியாரூரருக்குத் தூக்கம் வரவே இல்லை.

இறந்த பன்றி எழுந்ததா, மயங்கிய பன்றி எழுந்ததா எது உண்மையென்று எப்படிக் கண்டறிவது எனச் சிந்தனை ஓடிக்கொண்டே இருந்தது.

மழை வந்தபின் பன்றி எழுந்ததால்தான் நான் மயங்கிய பன்றி எழுந்தது என்று கருதுகிறேன்.

மழை வராமல் பன்றி எழுந்திருந்தால் இறந்த பன்றி எழுந்தது என்று கருதியிருப்பேன். அப்படி மழையில்லாமல் கூட மயங்கிய பன்றி எழுந்திருக்கலாம் அல்லவா.

ஒரே குழப்பமாக இருக்கிறதே என்று பலவாறு குழம்பிய நம்பியாரூரர் புரண்டு புரண்டு படுக்கையிலே படுத்தார். அப்படியே கண்கள் உறங்க ஆரம்பித்தன.

நம்பியாரூரருடைய கனவிலே `திருநாவலூர் சிவாலயத்தின் கருவறையின் உள்ளேயிருந்து இறைவன் சிவஞான சித்தர் உருவில் வருகிறார்.

நம்பியாரூரர் கோயிலிலே கண்களை மூடி இறைவனைத் துதித்துக் கொண்டு நிற்கிறார்.

கண் திறந்து பார்க்கிறார். எதிரில் நின்ற சிவஞான சித்தர் "உன்னுடைய கண்ணீர் தான் பன்றியை எழுப்பியது" என்று கூறி மறிந்தார்'. நம்பியாரூரர் திடுக்குற்றுக் கண் விழித்தார்.

மறுநாள் நம்பியாரூரரின் வேட்டை பற்றிக்கேட்டறிந்த நரசிங்கமுனையரையர் நம்பியாரூரரை அழைத்து "ஆரூரா நீ மன்னனாக முடிசூட்டிக் கொள்ள விரும்புகிறாயா" என்று கேட்டார்.

நம்பியாரூரர் சிந்தித்தார். மன்னானால் தீர்ப்புச் சொல்ல வேண்டும். நேற்றைய பன்றியின் நிலை பற்றி சரியான தீர்ப்பை என்னால் கூற முடியவில்லை.

இறைவன் சொன்ன தீர்ப்பு மனித அறிவுக்கு அப்பாற்பட்டது. ஆதலால் மன்னனாகி தீர்ப்பிடுவது பாவத்தையே சேர்க்கும் என்று கருதிய நம்பியாரூரர் "எனக்கு அந்தப் பதவி வேண்டாம் மன்னா" என்றார்.

"அப்படியானால் உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன். ஏற்றுக்கொள்வாயா" என்றார் மன்னர்.

"என்னுடைய திருமணம் தங்கள் விருப்பந்தான்" என்றார் நம்பியாரூரர்.

சரி அப்படியானால் மீதியை நான் கவனித்துக் கொள்கிறேன் என்றார் மன்னர். நம்பியாரூரர் விடைபெற்றுச் சென்றார்.

நமச்சிவாய

# திருவாசகம்

## மூலமும் விளக்கமும் தொகுதி - 01 நூலிலிருந்து

- சிவபுரம் ஐயா
தம்பிரான்தோழர் கபிலனார்

# மெய்யுணர்தல் - விளக்கம்

*முகவுரை*

தற்போதத்தில் மூழ்கி இருக்கும் ஆன்மாக்கள் தங்களுக்குத் தோன்றியவாறே சரியெனக் கருதி தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கும் கொடிய நிலையிலிருந்து தன்னை மீட்டு தன்னாட்டம் சிவனாட்டம் ஆகுமாறு மாறும்போது தான் நல்வழிப்படுகிறேன் உய்கிறேன் என உணரும். மேன்மேலும் அவ்வழிப்பட விரும்பும் மெய்யை உணர்ந்தவன் நிலை எவ்வாறு இருக்கும் என மாணிக்கவாசகர் ‘மெய்யுணர்தல்’ எனும் பதிகத்தில் வெளிப்படுத்திப் பாடுகிறார்.

*பாடல் - 01*

உன்னுடைய திருவருள் என்னுடைய உள்ளத்தில் வெளிப்பட்ட பின் அந்த ஆனந்த உணர்வில் உடல் தானே சிலிர்க்கிறது. மயிர்க்கூச்செறிந்து நடுங்குகிறது. உன்னுடைய சிலம்பணிந்த மணங்கமழும் திருவடிகளுக்கு கைகள் தானாகவே தலைமேல் கூப்பி வணக்கம் செய்கின்றன கண்கள் நீர்ததும்பி தானே சொரிகின்றன.

ஐயகோ இது நாள் வரை இந்த மெய்யை அறியாமல் பொய்யில் மூழ்கி இருந்தேனே என உள்ளம் வெதும்பி அழுகிறது. பொய் தானே தவிர்ந்து விலகிப் போகிறது.

உன்னைப் போற்றுகிறேன். வெல்க வெல்க என்று போற்றுகிறேன். அவ்வாறு போற்றும்போது உன் திருவடிகளைப் பற்றிக்கொண்டிருக்கும் கைகளை இனிமேல் நெகிழ விடமாட்டேன், இன்னும் இறுகவே பற்றுவேன் எனக் கூப்பிய கரங்களை இறுகப் பொருந்துமாறு தொடர்ந்து தொழுகிறேன். அப்போது தான் என் கைகளுக்குள் அகப்படாதவன் நீ என்பது உணரலாகிறது. ஐயனே உன்னை யான் பற்றிக் கொள்ள வல்லவன் அல்லேன். நீ தான் என்னையும் யாவையும் பற்றிக் கொண்டிருப்பவன் ஆதலால் தயவு செய்து என்னையும் ஒரு பொருட்டாகக் கருதி கண்டு கொண்டு ஆட்கொண்டு அருள்வாயாக என வேண்டுகிறன்.

### பாடல் - 02

என்னுடைய வாழ்வும் குடியும் இவ்வுலகில் எவ்வாறு கெட்டு அழியினும் இந்திரன், திருமால், பிரமன் ஆகியோரின் தயவை ஒரு போதும் நாடி என்னைக் காப்பாற்றுமாறு வேண்டமாட்டேன். நரகம் சென்று அந்த நரகத்தில் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் போதுகூட உன் அடியார் அல்லாத எவரிடமும் என் கைகளை நீட்டி என்னைக் காப்பாற்றிக் கொள்ளச் சம்மதிக்க மாட்டேன். உன்னுடைய அடியார் எத்தகைய சிறுமையான நிலையில் வாழுமாறு உன்னுடைய திருவருளால் பணிக்கப்பட்டிருந்தாலும் இரந்தவர்க்கு இரந்ததை இரந்தவாறு வழங்கும் இறைவனே அவர்களை யான் ஒருபோதும் உரையாலோ எண்ணத்தாலோ இகழ மாட்டேன். உன்னை அல்லாது தெய்வம் என்று இன்னொன்றை என் உள்ளம் ஒருபோதும் ஏற்கவும் மாட்டாது, எண்ணவும் மாட்டாது. தனக்கு உவமை இல்லாத எங்கள் பெருமானே.

### பாடல் - 03

தனக்கு உவமை இல்லாதவன், அதுஅது உள்ள நிலையிலேயே அதற்கு அருள்பவன், யாராலும் பற்றிக் கொள்ள முடியாதவன் எனினும் யாவையும் விடாமல்

பற்றிக்கொண்டே இருப்பவன், உன்னை அடியேன் நினைந்து உருகி காதல் மிகக்கொண்டு பைத்தியமான மனத்தோடு பைத்தியம் இவன் என்னமன நினைவில் எவ்வாறு எல்லாம் தோன்றுகிறதோ அவ்வாறெல்லாம் பொருத்திப்பொருத்திப் பழித்துப் பேசினர். ஊர் ஊராகச் சென்று யாவரும் தங்கள் மனதில் தோன்றியவாறு பேசினர் இவற்றைப் பொருட்படுத்தாது பெருமையாக ஏற்றுக் கொண்டு உன் அடியை நாடமுடியாதவனாக இருக்கிறேன். இவற்றைப் பொருட்படுத்தும் நான் என்ற அகந்தை உணர்வு சாவது என்றோ என அறியாமலும் இருக்கிறேன்.

### பாடல் - 04

நான் என்ற அகங்காரத்தைத் தக்கனிடம் இருந்து சாகடிக்குமாறு அவனுடைய வேள்வியைத் தகர்த்தாய். இன்று ஆ ஆ என்று அமிர்தம் உண்ணும் ஆசையில் பாற்கடலைக் கடைந்த தேவர்கள் அதிலே தோன்றிய ஆலகாலம் என்னும் கொடிய விடம் கண்டு அஞ்சி இனிமேல் ஆவது எதுவோ! இந்த விடத்திலிருந்து யாம் பிழைப்பது அரிதே எனக் கருதி எந்தையே எனக் கூறியவாறு வந்த தேவர்களின் ஆபத்தை விலக்கி அந்த நஞ்சைத் தன் தொண்டையிலே அடக்கி அமிர்தத்தை அவர்களுக்குப் பிச்சையாக இடும் நம்முடைய தலைவர் எம்பெருமான் சிவபெருமானே ஆயினும் அவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் என்பதை அறியாமல் தாமும் அவருக்கு ஒப்பானவரே எனக் கருதி சிவன், விஷ்ணு, பிரமா என மும்மூர்த்திகள் வரிசையில் தம்மையும் வைத்து எம்பெருமானோடு சமமாக எண்ணி விண்ணையும் மண்ணையும் ஆண்டு தேவர் என்ற பெருமையுடன் இறுமாந்து திரிவதால் அவர்கள் அடைந்தது சிறுமையே அல்லாமல் வேறு எதுவும் இல்லை. இவ்வாறு அறியாமை இருளில் மூழ்கி, தம்மைத் தாமே உயர்ந்தோர் என எண்ணியவாறு அலைந்து திரிவதால் அவர்கள் பாவத்தைப் பெருக்கினரே அன்றி வேறெதையும் சாதித்தனர் அல்லர்.

### பாடல் - 05

யான் உன்னை நோக்கி தவம் ஏதும் புரியவில்லை. குளிர்ந்த மலர்களைத் தூவி குறுக்கீடு ஏதும் இல்லாமல், உன்னிடம் வேண்டி வழிபாடும் செய்திலேன். கேடே செய்யுமாறு என்னுடன் கூடியே பிறந்த அரிய வினைகளை ஏராளமாகக் கொண்டிருக்கிறேன். உனக்கு அன்பராக உள்ளவர் மத்தியில் இருந்து சிவமே உன்னைப் பெறும் பேற்றை எய்தினேன் அல்லேன். நின் திருவடியை வந்து அடைந்து ஆளாகும் தன்மை இல்லாமல் செத்தே இப்பிறவியை வீணாக்கும் தன்மையுடன் இருக்கும் என்னை ஆட்கொண்டு அருள்வாயாக. உன்னையே நோக்கி ஐம்புல மாயத்தை ஒடுக்கி ஒருநிலைப்பட்ட தவத்தைப் புரியாது கேடு விளைவிக்கும் வினைகளில் சிக்குண்டு உன் திருவடி நிழலை வந்தடையும் முக்தியைப் பெறத் தகுதி இல்லாமல் சாவதற்கே காத்திருக்கும் அடியேனுக்கு அருள் செய்து ஆட்கொண்டு அருள்வாயாக மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலான எம்பெருமானே.

### பாடல் - 06

பரந்துபட்ட பல்வேறு திசைகளிலும் சென்று கொய்து வந்த மலர்களை இட்டு அவனோடு முரண்படாதவாறு என்னுடைய விண்ணப்பத்தைச் சொல்லி வேண்டுகிறேன். வேண்டியதை வேண்டியவாறு வழங்கும் இறைவன் கேட்டதை எல்லாம் எமக்குக் கொடுப்பான் என நம்பும் அன்பருடைய உள்ளத்தில் அல்லாதவர் உள்ளத்தில் மறைந்து இருப்பது போல் அல்லாமல் உள்ளங்கவர் கள்வனாக வெளிப்பட்டே இருக்கிறான். உன்னுடைய சிலம்பணிந்த மணங்கமழும் திருவடிகளை நேசிக்கும் அன்பை எனக்கு நிரந்தரமாய் அருள்வாயாக. நிரந்தரமாக அருளினால் இடைவிடாமல் ஏத்திஏத்தித் தொழுது உன் திருவடி நிழலாம் முக்தி என்னும் வீடுபேற்றை வந்து அடைவதன் மூலம் உயிர் அடையக்கூடிய பயன் முழுவதையும் அடைவேன்.

## பாடல் - 07

இந்த உலகம் முழுவதும் கண்டவன் எனத் தன்னைத் தானே போற்றிக்கொள்ளும் தன்மையன் படைப்புக் கடவுள் பிரமா, அவ்வாறு இந்த உலகம் முழுவதையும் படைத்தவனைப் படைத்தவன் தான் எனத் தருக்கித்து இருப்பவன் திருமால். இந்த எண்ணம் தவறோ, சரியோ என அறியாமல் சிவபெருமானை வணங்குவதற்காக இருவரும் சிறந்த மலர்களைக் கைகளில் ஏந்தியவாறு எங்கும் தேடி அலைந்தும் அகப்படாமல், அவர்களுக்குப் புலப்படாமல் அப்பாற்பட்டு இருப்பவனே வள்ளலாகிய எம்பெருமான். பேய்களோடு சேர்ந்து சுடுகாட்டிலே கதியே இல்லாதவன் போல் காட்டி நாடகமாக நடனமாடிக் கொண்டிருக்கிறான். இவன் கதியற்றவன் இவனைக் கொல்வது எளிது எனக் கருதி தங்கள் வேள்வி நெறியில் நம்பிக்கை வைத்த தாருகாவனத்து முனிவர்கள் புலியினை ஏவ அதைக் கொன்று உரித்து அதன் தோலை ஆடையாக உடுத்திக் கொண்டான். தருக்கித்து இருப்பவர் தருக்கை ஒழிப்பதற்காக பைத்தியம் பிடித்தவன் போல் ஆடித்திரிவதால் அவனைப் பித்தன் என்போர், தெளிந்து, அவனே மெய்ஞானி எனத் தெளியுமாறு, அலைந்து திரிவான்.

## பாடல் - 08

பித்தன் எனத் திரியும் காலத்தில் காற்றும் தீயும் நீரும் நிலமும் ஆகாயமும் என யாம் அறியுமாறு தகுதியில் தாழ்ந்து வந்து தன்னை அறிவிக்கும் காலம் எக்காலமோ. இதுவரை அனுபவித்த ஊழ்வினை போக இனிமேல் யாம் அனுபவிக்க வேண்டிய வினைகள் எவ்வளவோ என அறியாத நிலையில் அவரவர் உள்ளபடியே அறிந்து வந்து அருளும் அத்தனாகிய உன் அடியேன் செய்த கொடிய வினைகளை கழித்து அருளும் காலம் இக்காலமே எனக்கருதி அவற்றைக் கழித்து வந்து எம்மைக் காப்பவனே.

### பாடல் - 09

பிறவிக்குக் காரணமாகிய மூலனே, எம்பெருமானே, குளிர்ந்த நிலவைப் பொழியும் மதியில் தேய்ந்த பிறையை மாலையாகச் சடை முடியில் அணிந்தவனே. விண்ணோர்க்கும் கடவுள் ஆனவனே. இத்தகைய சிவபெருமான் எங்கள் பெருமான். என்னுடைய சிறுமை கண்டும் என்னை ஆண்டு கொண்ட பெருமான். அவன் என்னுடைய பெருமான் என்று சொல்லுமாறு நான் அவனுக்கு அடியேன் ஆனேன். இவ்வாறு என்னை ஆக்குமாறு பூமியிலே சுயம்பாகத் தோன்றுபவன். இவ்வாறு யான் அறிந்தவாறு உன்னை எடுத்துச் சொல்ல அருள்புரிவாயாக.

### பாடல் - 10

உன்னுடைய அன்பரில் ஒருவன் என உன் திருக்கூட்டத்தில் புகும் தகுதியை உடையவன் அல்லேன். எனக்குப் பொல்லாதனவே செய்தாற்போல் தோன்றினும் விலக்க முடியாத அன்புக்கு ஆளான என் மணியே. தகுதியில் மிகுந்த நீ தகுதியே இல்லாத என்னை ஆட்கொண்ட தன்மை எத்தகைய சிறுமை உடையவர்களையும் ஆட்கொள்ளும் தன்மையன் என்பதை எடுத்துரைக்கும் பெருந்தகுதி அல்லவோ. தகுதி இல்லாதவரை மிகவும் உயர்த்தித் தேவர்களை அவர்களுக்கு பணி செய்யுமாறு பணித்து மேலான வானவரை நமக்குக் கீழ்படுத்தும் மேலானவனே. இதை விட மேலான நிலையை யாரும் எமக்கு அருள முடியாதபடி அருளிய அமுதே. இதுவரை நீ என்னை வாழ்வித்தவாறு எவ்வாறு என நினைத்துப் பார்த்தால் துன்புறுத்தி என்னை சிறுமைப்படுத்த விரும்பாமல் தெளிவாக்கி என்னை மேன்மைப்படுத்தவே விரும்பினாய் என்பது தெளிவாகிறது. இதற்காக நீ செய்த நாடகத்தை நினைத்தால் நகைக்க மட்டுமே முடிகிறது.

## முடிவுரை

தகுதியே இல்லாத என்னை ஆட்கொண்டு அருளும் தன்மையால் தன்னேரில்லாத் தகுதி உடையவன் தானே என்பதை எனக்கு உணர்த்துமாறு மேற்கொண்ட நாடகமே என் வாழ்க்கை என நினைக்கும்போது புன்சிரிப்போடு அதை முழுதுமாக ஏற்றுக்கொண்டு தெளிவுற அருள் செய்வாயாக. இவ்வாறு தெளிவுறுதல் ஒன்றேயன்றி வேறு பயன் நோக்கி உன்னை யான் நாடிலேன் என்ற உறுதியில் நிலைத்திருப்பதை மெய்யுணர்தல் என பத்துப் பாடல்களில் உறுதிப்படுத்துகிறார்.

# மெய்யுணர்தல் - பாடல்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாயென்னைக் கண்டுகொள்ளே 1

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாதெங்கள் உத்தமனே 2

உத்தம னத்தன் உடையான்
அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ
னென்ன மனநினைவில்

ஒத்தன வொத்தன சொல்லிட
        வூரூர் திரிந்தெவருந்
தத்தம் மனத்தன பேசஎஞ்
        ஞான்றுகொல் சாவதுவே 3

சாவமுன் னாள்தக்கன் வேள்வித்
        தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா
        விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடும்
        எண்ணி விண்ணாண்டு மண்மேல்
தேவரென் றேஇறு மாந்தென்ன
        பாவந் திரிதவரே 4

தவமே புரிந்திலன் தண்மலர்
        இட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை
        யேன்உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி
        லேன்நின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாய்அடி
        யேற்கெம் பரம்பரனே 5

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட்
        டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெற
        லாமென்னும் அன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
        வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை
        யேத்த முழுவதுமே 6

முழுவதுங் கண்ட வனைப்படைத்
        தான்முடி சாய்த்துமுன்னாள்
செழுமலர் கொண்டெங்குந் தேடஅப்
        பாலன்இப் பால்எம்பிரான்

கழுதொடு காட்டிடை நாடக
மாடிக் கதியிலியாய்
உழுவையின் தோலுடுத் துன்மத்த
மேல்கொண் டுழிதருமே 7

உழிதரு காலுங் கனலும் புனலொடு
மண்ணு விண்ணும்
இழிதரு காலமெக் காலம்
வருவது வந்ததற்பின்
உழிதரு காலத்த உன்னடி
யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை
காத்தெம்மைக் காப்பவனே 8

பவனெம் பிரான்பனி மாமதிக்
கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரான்என்னை ஆண்டு
கொண்டான்என் சிறுமைகண்டும்
அவனெம் பிரானென்ன நானடி
யேனென்ன இப்பரிசே
புவனெம் பிரான்தெரி யும்பரி
சாவ தியம்புகவே 9

புகவே தகேன்உனக் கன்பருள்
யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட
தன்மையெப் புன்மையரை
மிகவே உயர்த்திவிண் ணோரைப்
பணித்திஅண் ணாவமுதே
நகவே தகும்எம் பிரானென்னை
நீசெய்த நாடகமே 10

# மெஞ்ஞானக் கல்வி

**திருவண்ணாமலை**
**அடியண்ணாமலையில்**
**உள்ள கோசாலை கிராமத்தில்**
**கடந்த 10 ஆண்டுகளாக**
**சிவபுரம் ஐயாவின் வழிகாட்டுதலில்**
**நடந்து கொண்டிருக்கும்**
**இலவச மழலையர் பயிலகம்**
**'சிவபுரம் இளமழலை கூடம்'**
**மெஞ்ஞானப் பள்ளிக்கும்**
**மெஞ்ஞான கல்விக்கும்**
**ஓர் எடுத்துக்காட்டாகும்.**

## முக்கியத்துவம்

இக்காலக் கல்விக் கூடங்கள் மாணவர்களைப் பயிற்றுவித்து வேலையில் சேரத் தகுதிப்படுத்துவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டு இயங்குகின்றன. இதனால் இந்தக் கல்விக்கூடங்கள் செய்யும் மதிப்பீடு குறிப்பிட்ட துறை பணிக்குத் தேவையான அடிப்படை அறிவை கொண்டிருக்கின்றனரா என்று மாணவர்களைச் சோதித்துப் பார்க்கின்றனரே அல்லாமல் அவரவரின் தனித்திறன் வளர்க்கப்படுவதோ மதிப்பிடப்படுவதோ கிடையாது.

இன்று தமிழ்நாடு அரசாங்கமே அங்கன்வாடி முதல் உயர்கல்வி வரை இலவசமாகக் கற்கும் வசதியுடன் கூடிய

கல்வி நிறுவனங்களை நடத்தி வருகின்றது. இந்த நிலையில் சிவபுரம் இளமழலைகூடம் இலவச மழலையர் பயிலகம் என்பது அதன் முக்கியத்துவத்திற்குத் துணைக் காரணமே அல்லாமல் முதன்மையான காரணம் அல்ல.

### மனிதவளச் சீரழிவு

உலகிலுள்ள இயற்கை வளங்களையெல்லாம் பயன்படுத்தித் தனக்குத் தேவையான செயற்கை வளங்களை மனிதன் உருவாக்கிக் கொண்டிருக்கிறான். இந்தச் செயற்கை வள மேம்பாடு பூலோக உருண்டையின் சமநிலையைப் பாதிக்கும் அளவிற்கு இயற்கையை மாற்றியும் அழித்தும் வருகிறது. இந்தச் சமநிலை பாதிப்பு உலகின் இயற்கை அளவில் நிகழ்கிறதே அல்லாமல் இயற்கை வளங்களில் ஒன்றாக விளங்கும் தன்னையும் பாதிக்கிறது என்பதை மனித சமுதாயம் போதியளவு உணரவில்லை, உணர்த்துவதற்கான முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை.

## மனிதவள வேளாண்மை

மனிதவள மேம்பாடு என்பது இயற்கை மனிதனுக்கு வழங்கிய திறன்களையும் இயற்கையாகவே அவனுக்கு அமைந்த தேவைகளின் நிறைவையும் ஆய்ந்தறியாமல் மனித வளத்தின் தரத்தை எடை போடுவது சாத்தியமில்லை.

மனிதனின் தனித்திறனை முடிந்த வரையிலும் அளந்தறிந்து அவற்றை மேம்பாடு நோக்கி முன்னெடுத்துச் செல்லும் தன்மையை அவனுக்கு ஊட்டுவதையே மனித வள வேளாண்மை (Human Resource Cultivation) என்று குறிப்பிடுகிறோம்.

இந்த மனித வள வேளாண்மையைச் செய்யும் கல்விக்கூடம் ‛சிவபுரம் இளமழலை கூடம்’ என்பதே எமது இலவச மழலையர் பயிலகத்தின் முக்கியத்துவம் ஆகும்.

இத்தகைய நோக்கில் அமைந்த கல்வி வெற்றியளித்திருக்கிறது என்பதைக் கடந்த பத்து வருட வரலாறு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. எவ்வாறெனில் இளமழலைகூடத்தில் மழலைக் கல்வியை முடித்த மாணவர்கள் திருவண்ணாமலையிலுள்ள பல்வேறு பள்ளிகளிலும் மேற்படிப்பில் கல்வியிலும் விளையாட்டுகளிலும் முதன்மை பெற்று விளங்குகிறார்கள்.

அந்த மாணவர்களின் தொடர்பையும் உறவையும் சுதந்திர தினவிழா, ஆண்டு விழா போன்ற விழாக்களில் கலந்து கொள்ளும்படி அழைத்து தொடர்ந்து அவர்களோடு பழகிக் கொண்டிருக்கிறோம்.

**இளமழலை கூடத்தில்**
**முன்னெடுக்கப்படுவது**
**மனிதவள வேளாண்மைக்**
**கல்வியாகும்.**

நமச்சிவாய நமச்சிவாய

# குழந்தைக்கூத்தன்

## மெஞ்ஞானக் கல்வி மலர் – 1

இறைவன் எத்தன்மையன் எனில்
அவன் ஒரு நாமம் ஓர் உருவம்
ஒன்றுமில்லாதவன்

சிவனை வணங்கு சிவனை வணங்கு
சிவனை மட்டுமே வணங்கு வணங்கு
சிந்தை தெளியவும் ஜீவன் உய்யவும்
சிவனை மட்டுமே வணங்கு வணங்கு

சிவனுக்கு மேல் ஒரு தெய்வமும் இல்லை
சிவனுக்கு இணையாய் யாருமே இல்லை
சிவனை தேடியே கண்டவர் இல்லை
சிவனடி சேர்ந்தவர் வீழுந்ததும் இல்லை

அறம் அல்ல சிவம் அன்பே சிவம்
பணிவல்ல சிவம் துணிவே சிவம்
அறிவல்ல சிவம் உணர்வே சிவம்
இன்புற வாழ்வாரே இறைவனடி சேர்வார்
வாழ்தலே வழிபாடு

மறையும் முறையும் எமக்கில்லை
மனமும் மொழியும் தடையில்லை
சிவனை நினைப்போம் சிவனை உரைப்போம்
சிவனடி சேரவே சீவித்திருப்போம்
வாழ்தலே வழிபாடு

**சிவமே இறை தமிழே மறை**

ஒவ்வொரு மனிதனும்
இன்புற வாழ்வது
எவ்வாறு
என்ற வழியைக்
காண்பதும்.
அவ்வாறு வாழ்வதற்கு
வேண்டிய சமுதாயத்தை
உருவாக்கும் வழியைக்
காண்பதும்.
இயற்கை வளங்கள்
அழியாமல்
பேணும் வழிகளைக்
காண்பதும்.
இல்லாத ஒன்று
தேவை எனில்.
அதைத் தேடிப் பெறும்
வழியைக்
காண்பதுமான.
விஞ்ஞானத்தின்
விஞ்ஞானமே
மெஞ்ஞானம்.


**சிவபுரம்**
என் :219, 16ஆவது தெரு, அஷ்டலட்சுமி நகர், ஆலப்பாக்கம், சென்னை-600116.
9940587597, 9791034098, 9841087052, 9500111546
இணையம் : www.sivapuram.com, மின்னஞ்சல் : sivapura@gmail.com